தமிழ்நாடுபள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-600 006.

ந.க.எண்.34785/எம்/இ1/2023 நாள்:06 .12.2023

பொருள் : பள்ளிக்கல்வி - கல்விசாரா மன்ற செயல்பாடுகள் – சிறார் திரைப்படம் திரையிடுதல் மன்றம் 2023-24 - அரசு மற்றும் அரசு உதவி பெறும் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 6-9 வகுப்பு மாணவர்கள் கண்டுணர்தல் திரையிடுதல் - டிசம்பர் மாதத்திற்கான திரைப்படம் திரையிடல் – வழிகாட்டும் நெறிமுறைகள் வழங்குதல் - சார்ந்து.

பார்வை : தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை -600 006. ந.க.எண்: 34785/எம்/மன்றம்/2023, நாள்.30.10.2023.

**********

2022-2023 ஆம் கல்வியாண்டில், அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9 வகுப்பு வரை பயின்று வரும் மாணவர்கள் கண்டுணறும் வகையில் ஒவ்வொரு மாதத்தின் இரண்டாவது வாரத்தில் சிறார் திரைப்படங்கள் திரையிடப்பட்டன. அதன் தொடர்ச்சியாக, 2023-2024 ஆம் கல்வியாண்டில், அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் சிறார் திரைப்படங்கள் திரையிடப்பட்டு வருகிறது. மாணவர்கள் தாங்கள் வாழும் சூழலை புரிந்து கொள்ளுதல், பல்வேறு கலாசாரங்களின் தனித்தன்மையினை அறிந்து கொள்ளுதல், தன்னம்பிக்கை, நட்பு பாராட்டுதல், குழுவாக இணைந்து செயல்படுதல்பாலினசமத்துவம் உணர்தல் ஆகிய பண்புநலன்களை அடையாளம் காணுதல், தங்களிடம் உள்ளார்ந்து புதைந்திருக்கும் படைப்பாற்றலை வெளிக்கொணர செய்தல் ஆகியன இச்சிறார் திரைப்படம் திரையிடுதலின் நோக்கமாக அமைகிறது. மேலும், இத்திரைப்படங்களை கண்ணுறும் மாணவர்களின் விரிசிந்தனை மேம்படுதல் மற்றும் விமர்சிக்கும் திறன் உள்ளிட்ட பண்புகள் பெற இந்நிகழ்வு தூண்டுகோலாக அமைகிறது.

இதனைத் தொடர்ந்து டிசம்பர் மாதம் 3-ம் தேதி **'சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம்'** அனுசரிக்கப்படுவாதால் இம்மாதம் மாற்றுத்திறனாளிகளை மையப்படுத்திய திரைப்படமான 'பன்ட்'-Bunt எனும் கொரியன் மொழி (வசனங்கள் அனைத்தும் தமிழ் துணையுரையுடன்) திரைப்படம் திரையிடப்பட உள்ளது. மாற்றுத்திறனாளிகளின் கண்ணியம், உரிமைகள், நல்வாழ்வு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயத்தை உருவாக்க வேண்டியதன் அவசியத்தின் அடிப்படையில், மாற்றுத்திறனாளிகள் பற்றிய

அர்த்தமுள்ள ஒரு கண்ணோட்டத்தை உருவாக்க, குழந்தைகளுக்கு உதவுவதே இதன் நோக்கமாகும். இத்திரைப்படத் திரையிடல் அமர்விற்கான மாதிரி நிகழ்ச்சி நிரல், கதைச்சுருக்கம், திரைப்படம் திரையிட்ட பின் உரையாட வேண்டியவை, மற்றும் spotlight வினாக்கள் பின்வருமாறு வழங்கப்படுகிறது.

(i) <u>சிறார் திரைப்படத் திரையிடல் அமர்விற்கான நிகழ்ச்சி நிரல்</u>

படம்: ('பன்ட்' - Bunt) காலஅளவு: 96 நிமிடங்கள் (சிறப்பு அழைப்பாளர்களுடன்)

| வ. எண் | காலஅளவு (நிமிடங்கள்) | செயல்பாடுகள் | நடத்தக்கூடியவர் / உறுதிசெய்பவர் |
|---|---|---|---|
| 1 | 10 | படம் திரையிடுவதற்கு வகுப்பறை தயாராக உள்ளதா? என்பதை உறுதிபடுத்துதல். | பொறுப்பு ஆசிரியர் |
| 2 | 10 | திரைப்படம் திரையிடப்படும் அறையில் அனைத்து குழந்தைகளையும் கூட்ட வேண்டும். | வகுப்பு ஆசிரியர்கள் உதவியுடன் பொறுப்பு ஆசிரியர் |
| 3 | 5 | சிறப்புஅழைப்பாளர்அறிமுகம் (சிறப்பு அழைப்பாளர் திரைப்படம் தொடங்கும் முன்னரே வருவதை உறுதிப்படுத்தி கொள்ளவும்) | தலைமை ஆசிரியர்/ பொறுப்பு ஆசிரியர் |
| 4 | 5 | படத்தின் அறிமுகம் (கதைசுருக்கம்) (இணைப்பு – 2) | பொறுப்பு ஆசிரியர் |
| 5 | 96 | படம் திரையிடல் | பொறுப்பு ஆசிரியர் |
| 6 | 10 | சிறப்பு அழைப்பாளர் உரை | பொறுப்பு ஆசிரியர் அறிமுகப்படுத்தி பேச அழைத்தல் |
| 7 | 5–10 | கருத்து கேட்பு அமர்வு | 2 – 3 குழந்தைகள் பேசுவார்கள் |
| 8 | 15 | ஸ்பாட்லைட் கேள்விகள் (Spotlight) (Spotlight கேள்விகளுடன் சேர்த்து மாணவர்களின் ஆர்வத்தை தூண்டும் வகையிலான கேள்விகளை கேட்டு உரையாடல்களை நிகழ்த்தலாம்). | பொறுப்பு ஆசிரியர் (ஒரு பெரிய குழுவாக இருந்தால் பிற ஆசிரியரின் உதவியை பெறலாம்) |
| 9 | 5 | நன்றி உரை | பொறுப்பு ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியர் |

(ii) **கதைச் சுருக்கம் - பன்ட் (Bunt)**

**வெளியான ஆண்டு:** 2007

**திரைப்படத்தின் காலஅளவு:** 96 நிமிடங்கள் | தமிழ் துணையுரையுடன்.

'பன்ட்'(Bunt) தென் கொரியாவில் உருவான கொரியன் மொழி திரைப்படம். திரைப்படத்தின் கதையை எழுதியவர்கள் பார்க் கியூ–டே மற்றும் சோய் சுக்–ஹ்வான். இதனை பார்க் கியூ –டே அவர்களே இயக்கியும் உள்ளார்.

டோங்–கு, தினமும் பள்ளிக்குச் செல்வதை விரும்பும் பதினொரு வயது சிறுவன். நாள்தோறும் பள்ளி இடைவேளையின் போது மற்ற மாணவர்களுக்கு தண்ணீர் எடுத்து வருவதே அவனது ஒரே தலையாய பணியாக ஆசையோடு செய்கிறான். ஆனால் மாணவர்கள் பலர் அவனை முகத்திற்கு எதிரே கிண்டல் கேலி செய்கிறார்கள். மாறாக டோங்–கு அவர்களைப் பார்த்து புன்னகைக்கிறான், எவ்வாறாயினும், அவன் இருப்பதில் பள்ளி குறைவான கவனம் காட்டுகிறது. தேர்வு நாட்களில், வகுப்பின் சராசரி தேர்ச்சி சதவிகிதத்தை குறைக்காமல் இருக்க, அவனது ஆசிரியர் அவனை வீட்டிலேயே இருக்குமாறு வற்புறுத்துகிறார்.

சிறப்பு குழந்தைகளுக்கான பள்ளிக்கு டோங்–கு மாற்றப்பட வேண்டும் என்று பள்ளி விரும்புகிறது. டோங்–குவின் தந்தைக்கு ஒரே ஒரு ஆசைதான், டோங்–கு எந்த தடையையும் தாண்டி வழக்கமான தொடக்கப் பள்ளியிலேயே படிக்க வேண்டும் என்பதுதான். பல்வேறு குடும்ப மற்றும் பொருளாதார சிக்கல்களுக்கு முடிவில் கடைசியாக ஒரு நல்ல செய்தி பிரகாசிக்கிறது, பள்ளியின் பேஸ்பால் அணிக்கு மேலும் மாணவர் தேவை என்று, இது டோங்–கு விற்கு பெரும் வாய்ப்பாக அமைகிறது. அவனுக்கு விளையாட்டு விதிகள் பற்றிய புரிதல் இல்லை என்றாலும், தனது புதிய பொழுதுபோக்காக மைதானத்தை அனுபவிக்கிறான். மேலும் அவன் அணியில் இருப்பதனால் பள்ளியில் தொடர்ந்து படிக்க அனுமதிக்கப்படுகிறான். அவனது தந்தை ஜின்–கியூ, தன் மகனை பற்றிய பொது சமூகத்தின் பார்வையையும் புரிதலையும் பொருட்படுத்தாமல் தன் மகன் மீது கூடுதல் அன்பும் கவனமும் செலுத்துவதோடு அவனது கனவு மெய்பட உழைக்கிறார். அதோடு தங்களின் வாழ்வாதாரத்திற்கும் போராடுகிறார்.

சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளின் வளர்ப்பில் பெற்றோரின் ஈடில்லா பங்களிப்பும் அரவணைப்பும் எத்தனை பெரிய மாற்றத்தை

உருவாக்குகிறது என்பதையும் அதன் முக்கியத்துவத்தையும் அழகாகவும் ஆழமாகவும் உணர்த்துகிறது இத்திரைப்படம்.

(iii) திரைப்படம் திரையிட்ட பின் உரையாட வேண்டியவை - கருத்து கேட்பு அமர்வு (feedback)

1. இந்த திரைப்படம் உங்களுக்கு பிடித்திருக்கிறதா?
2. இத்திரைப்படத்தின் மூலக்கரு / மையக் கருத்து என்ன?
3. கதை எதைப் பற்றியது அல்லது யாரைப் பற்றியது? அதை எப்படி அறிந்து கொண்டீர்கள்?
4. கதையில் நிகழும் மிக முக்கியமான சம்பவங்கள் என்னென்ன?
5. தங்களை மிகவும் கவர்ந்த கதாப்பாத்திரம் எது?
6. திரைப்படத்தின் வாயிலாக தாங்கள் கற்றுக்கொண்ட முக்கிய கருத்துகள் என்னென்ன?
7. இத்திரைப்படம் எடுக்கப்பட்டுள்ள நிகழ்விடம் படத்திற்கு எவ்வாறு சிறப்பு செய்கிறது?
8. இப்படத்தில் இசைக்கு எவ்வாறு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது?
9. இத்திரைப்படத்தில், எந்த ஒரு கதாப்பாத்திரத்திற்கு நீங்கள் பின்னனிக்குரல் கொடுக்க விரும்புவீர்கள், அவ்வாறு விருப்பப்படின், ஒரு நிகழ்வில் அவர் விரும்பும் பாத்திரத்திற்கு பின்னனி குரல் கொடுக்க சொல்லலாம்.
10. இத்திரைப்படத்தை பற்றி உங்களுக்கு தெரிந்தவர்களுடன் உரையாடுவீர்களா, மற்றும் அவர்கள் இப்படத்தை காண சொல்வீர்களா? ஏன்?
11. இத்திரைப்படம் பற்றி உங்களின் எண்ணங்களை 2 வரிகளில் எழுதுக.

(iv) மாணவர்களின் கவனத்தை ஈர்த்து ஆர்வத்தை தூண்டும் வினாக்கள் (Spotlight - questions)

1. கதையின் தொடக்கத்தில், இடையில் மற்றும் முடிவில் என்ன நடக்கிறது?
2. இந்த கதை எந்த இடத்தில் நடக்கிறது?
3. இந்த கதை எங்கு நடக்கிறது என்று எப்படி அறிவது?
4. திரைப்படத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட முக்கிய கதாபாத்திரங்கள் உள்ளனவா?
5. இக்கதை முக்கிய கதாபாத்திரத்தை தழுவி உள்ளதா அல்லது பிறரை சார்ந்து அமைகிறதா?
6. எந்த கதாப்பாத்திரத்திற்காவது குறிப்பிட்ட இசை அல்லது ஒலி கொடுக்கப்பட்டுள்ளதா?

7. எந்த ஒரு குறிப்பிட்ட கதாபாத்திரத்திற்காவது குறிப்பிட்ட வண்ணம் / வண்ணங்கள் தொடர்புடையதாக உள்ளதா ?
8. கதையின் தொடக்கத்தில் நாம் எங்கிருந்தோம் என்று நினைக்கிறீர்கள்?
9. இந்தக் கதை எப்போது நிகழ்கிறது எனக் கூற முடியுமா? இந்த கதை கடந்த காலத்தை சார்ந்ததா அல்லது நிகழ்காலத்தைச் சார்ந்ததா என்பதை எப்படி அறிவீர்கள்?
10. இத்திரைப்படத்தின் முழுகருத்தையும் மூன்று நிமிடங்களில் உங்களால் நடித்துக் காட்ட முடியுமா?

பார்வையில் காணும் செயல்முறைகளில் பள்ளிகளில் பாதுகாப்பாக திரைப்படம் திரையிடல் குறித்து விரிவான வழிகாட்டும் நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது. இதனை தவறாது பின்பற்றி மேற்கூறியுள்ள திரைப்படத்தினை EMIS போர்டலில் இருந்து பதிவிறக்கம் செய்து பள்ளிகளில் 6-9 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு திரையிட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்

முதன்மைக் கல்வி அலுவலர்கள், அனைத்து மாவட்டங்கள்

நகல்

1. மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை-600006.
2. இயக்குநர், தொடக்க கல்வி இயக்ககம், சென்னை-600006.